உ

ஓம் ஸ்ரீ சங்கர குரவே நம:

॥ श्री शंकर पद्य पुष्पांजलिः ॥

॥ ஶ்ரீ ஶங்கர பத்³ய புஷ்பாஞ்ஜலிः ॥

தமிழ் உரை

Dr. N. கங்காதரன், M.A., M.Litt., Ph.D

नमामि शङ्कराचार्य गुरुपादसरोरुहम् ।
यस्यप्रसादान्मूढोऽपि सर्वज्ञोऽहं सदाऽभवम् ॥

நமாமி ஶங்கராசார்ய கு³ருபாத³ஸரோருஹம் ।
யஸ்யப்ரஸாதா³ன்மூடோ⁴(அ)பி ஸர்வஜ்ஞோ(அ)ஹம் ஸதா³(அ)ப⁴வம் ॥

1. எந்த ஒருவருடைய அருளினால் மந்த புத்தியுள்ள நான் எப்பொழுதும் அனைத்தும் அறிந்தவன் ஆனேனோ அந்த ஸ்ரீ சங்கர குருவின் பாதத் தாமரைகளை அடிபணிகின்றேன். - ஆனந்தகிரி, சங்கரவிஜயம்

आनन्दघनमद्वन्द्व निर्विकारं निरञ्जनम् ।
भजेऽहं भगवत्पादं भजतामभयप्रदम् ॥

ஆனந்த³க⁴னமத்³வந்த்³வ நிர்விகாரம் நிரஞ்ஜனம் ।
ப⁴ஜே(அ)ஹம் ப⁴க³வத்பாத³ம் ப⁴ஜதாமப⁴யப்ரத³ம் ॥

2. ஆனந்த வடிவானவரும், இரண்டுருவம் அற்றவரும், மாறுதலற்றவரும், மாசற்றவரும், அண்டினவர்க்கு அபயமளிப்பவருமான பகவத்பாதரை நான் வணங்குகிறேன். - மனீஷா பஞ்சகத்தின் உரை.

याऽनुभूतिः स्वयंज्योतिरादित्येशानविग्रहा ।
शङ्कराख्या च तं नौमि सुरेश्वरपदास्पदम् ॥

யா(அ)னுபூ⁴திः ஸ்வயஞ்ஜ்யோதிராதி³த்யேஶானவிக்³ரஹா ।
ஶங்கராக்²யா ச தம் நௌமி ஸுரேஶ்வரபதா³ஸ்பத³ம் ॥

3. சங்கரர் என்றழைக்கப்படுவதும், ஸுரேச்வரருக்கு இறுதி அடைக்கலமுமான எந்த ஒரு ஒளிமயமான அனுபவம் கதிரவன் முதலான ஒளிவடிவங்களாகப் பரிணமித்ததோ அதை நான் வணங்குகின்றேன்.

- ந்ஞஸிம்ஹப்ரக்ஞமுனி
- பிருகதாரண்யக பாஷ்ய வார்த்திகம்.

यदीयवाक्सूर्यरुचिप्रणाशितो
हृदन्धकारो नमतामशेषतः ।
महात्मनः शिष्यहिते सदा रतान्
नमामि तान् शङ्करपूज्यदेशिकान् ॥

யதீ³யவாக்ஸூர்யருசிப்ரணாஶிதோ
ஹ்ருத³ந்த⁴காரோ நமதாமஶேஷதః ।
மஹாத்மனః ஶிஷ்யஹிதே ஸதா³ ரதான்
நமாமி தான் ஶங்கரபூஜ்யதே³ஶிகான் ॥

4. எந்த ஒருவரின் கதிரவனின் கதிர் போன்ற அறிவுரைகளினால் வணங்குபவரின் இதயத்தில் உள்ள (அறிவின்மை என்னும்) இருள் முழுவதும் களையப்படுகிறதோ, எந்த ஒருவர் தன்னுடைய சீடர்களின் நலனில் எப்பொழுதும் அக்கறை உடையவரோ அந்த ஸ்ரீ சங்கரரை வணங்குகின்றேன்.

- கைவல்ய நவநீதம் - ஸம்ஸ்க்ருத மொழிபெயர்ப்பு.

(**குறிப்பு:** இப்பகுதியின் மூல சுலோகங்கள் Voice of Sankara, Vol 1, No 4 ல் இருந்து எடுக்கப்பட்டன.)

சிவம்